# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

01.09.2020 செவ்வாய்க்கிழமை


## புதினம் தெரியுமோ

இன்டைக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில செய்தியாளர்கள் சந்திப்பு ஒன்று நடந்தது பாருங்கோ. நீங்கள் யோசிக்கிறது விளங்குது, இண்டைக்குக் கதவு ஒண்டும் அடிச்சு மூடப்படேல்ல. இந்தச் சந்திப்பை சட்டத்தரணி சுகாஸ்தான் ஏற்பாடு செய்திருந்தார். முன்னனிக்குள்ள இப்ப நடக்கிற பிரச்சினைக்கு சுகாஸ் தான் காரணம் என்று அந்தக் கட்சி ஆதரவாளர்கள் சிலர் கதைச்சத அரசல் புரசலாக் கேள்விப் பட்டிருந்தம். இப்ப நடக்கிறதுகளப் பாக்கேக்கே 9

'ஒரே நாடு ஒரே சட்டம்'

# 13 இல் கைவைத்தாலே சாத்தியப்பட வாய்ப்பு!



ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா தெரிவிப்பு

**கொழும்பு, செப். 1**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா தெரிவித்தார். 2

## கைதிகள் விடுவிப்பு

கொழும்பு, செப். 1

சிறைச்சாலையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் குறைப்பதற்கு ஜனாதிபதி அதிரடித் தீர்மானமொன்றை எடுத்துள்ளார். அந்த வகையில் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலை களில் சிறு குற்றங் 2

யாழ். – நாவாந்துறையில்

## இராணுவத்தால் இன்று தேடுதல்!

யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இன்று காலை பரவலாகத் தேடுதல் நடவடிக் 2

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு மேலும் அவகாசம்

கொழும்பு, செப். 1

2020ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை மேலும் ஒரு வாரகாலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. கல்விப் 2

## மின்னல் தாக்கி பெண் இறப்பு!

கொழும்பு, செப். 1

பொலன்னறுவ ஜயந்திபுர பிரதேசத்தில் மின்னல் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 50 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வயலில் இருந்து தனது கணவரு 2

## சந்நிதியில் சங்கிலி அறுப்பு இருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 1

சந்நிதி ஆலய தேர்த் திருவிழாவின்போது தங்கச் சங்கிலி அறுத்த இரு பெண்கள் ஆலயக் கடமையில் ஈடுபட்ட பொலிஸாரால் கைதுசெய்யப் 2

## இரண்டு வாள்களுடன் இளைஞன் கைது! 2



## டக்ளஸ்டன் என்னை கோர்த்து விடுகின்றனர்

சிக்க மாட்டேன் என்கிறார் அங்கஜன் எம்.பி

யாழ்ப்பாணம், செப். 1

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் என்னையும் சிலர் கோர்த்துவிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறு கோத்துவிடுவதால் நான் சிக்கமாட்டேன், 2

## மீன்பிடித் தொழிலுக்கு வடக்கில் பேராபத்து!!

கொழும்பு, செப். 1

வடக்கில் மீன்பிடித் தொழில் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்திய மீன்பிடிப் படகுகள் மீன்பிடிப்பதற்காக இலங்கை கடல் எல்லைக்குள் பிரவேசித்துள்ளமை தொடர்பிலான மாதாந்த அறிக்கையை சமர்ப்பித்த பாதுகாப்பு அமைச்சு, வடக்கின் மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பில் தனது கவலையை வெளியிட்டது. (ம-இ)

## கொரோனா பெருந்தொற்றால் ஊரடங்கு மீண்டும் வரலாம்!

அவதானம் தேவை என்று மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப். 1

உலகளாவிய ரீதியில் கொரோனா பெருந்தொற்று இன்னும் வேகமெடுத்துள்ள நிலையில், இந்த விடயத்தில் இலங்கை கூடுதல் அவதானத்துடன் செயற்பட வேண்டும். கொரோனாத் தொற்று மீண்டும் வந்தால் ஊரடங்கு உத்தரவுகள் மீண்டும் தவிர்க்க முடியாத தாக ஆகிவிடும் என்று தொற்று 2

## அங்கஜனுக்கு அலுவலகம் கச்சேரியில் இன்று திறப்பு

வரவேற்று மகிழ்ந்தனர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தனது அலுவலகத்தை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், இன்று திறந்து வைத்தார். அவருக்கு பொன்னாடை 2

# 13 இல் கைவைத்தாலே...

புதிய அரசமைப்பை இயற்றுவதற்கு காலமெடுக்கும் என அரசாங்கம் கருதும் பட்சத்தில் இதற்கான ஏற்பாடுகள் '20'ஆவது திருத்தச் சட்டத்தின்மூலம் மேற்கொள்ளலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.
இது தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா மேலும் தெரிவித்ததாவது:
'அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம், 16ஆவது திருத்தச்சட்டம் மற்றும் தேர்தல் முறை ஆகியவற்றிலுள்ள நாட்டுக்குப் பொருந்தாத அதேபோல் தீங்குவிளைவிக்ககூடிய விடயங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் ஆணை வழங்கினர்.
ஜனாதிபதியும், பிரதமரும் வெள்வேறான கட்சிகளை சார்ந்தவர்களாக இருந்தபோதே 19ஆவது திருத்தச்சட்டம் நாட்டை நிர்வ கிப்பதற்குத் தடையாக இருந்தது. தற்போது அண்ணனும், தம்பியுமே இவ்விரு பதவிகளை வகிக்கின்றனர். எனவே, 19 சிக்கலாக அமையாது. எனினும், அது மறுசீரமைக்கப்படவேண்டும். ஆனால் 19க்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைவிடவும் 13க்கு வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஒரே நாடு, ஒரே சட்டம் என்பதே ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கின்றது. அதனை நடைமுறைச் சாத்தியமான விடயமாக மாற்றியமைக்க வேண்டும். 13இனை மாற்றியமைக்காமல் இது சாத்தியப்படுமா என்ற கேள்வியும் எழுகின்றது. ஏனெனில் தமது ஆட்சி அதிகாரத்துக்குட்பட்ட பகுதிக்குத் தேவையான சட்டம் இயற்றும் அதிகாரம் மாகாண சபைக்கு இருக்கின்றது, எனவே, ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதியின் கொள்கையுடன் இது இவ் விடயம் ஒத்துபோகவில்லை. அடுத்ததாக அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் சட்டம், ஒழுங்கு என்பது மாகாணப் பட்டியலில் உள்ளது. இதன்படி முதலமைச்சரின்கீழ் இயங்கும் பொலிஸொன்றை உருவாக்கலாம். இந்நிலைமையை மாற்றாமல் மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் பொலிஸ் அதிகாரத்தை பெறுவதற்கு முயற்சிக்கப்படலாம். விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார், சுமந்திரன் ஆகியோரின் அண்மைக்கால அறிவிப்புகள் இதனையே வெளிப்படுத்தின.
அதேவேளை, புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு காலமெடுக்கும் என அரசாங்கம் கருதுமானால் அதற்கு முன்னர் 20ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக 13இனை மாற்றியமைக்கலாம். இதன்படி மாகாணசபைக்கான சட்டம் இயற்றும் அதிகாரம், வடக்கு கிழக்கு இணைப்பு, ஆயுதம் தாங்கிய பொலிஸ் படையை உருவாக்கும் அதிகாரம் ஆகிய சரத்துகளை நீக்கவேண்டும். ஒரு வசனத்தின் ஊடாக இதனைச் செய்யலாம்' என்றார். (ம-44)

## கைதிகள்...

களுக்காக தண்டனைபெறும் 444 கைதிகளை விடுதலை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு விடுதலை செய்யப்படும் கைதிகளில் 83 பேர் வெலிக்கடை சிறைச்சாலையைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
தண்டப்பணம் செலுத்த முடியாமல் சிறு தவறுகளுக்காக சிறையில் உள்ளவர்கள் மற்றும் 65 வயதிற்கு மேற்பட்ட சிறு தவறுகளுக்காக சிறையில் உள்ளவர்கள் இவ்வாறு விடுதலை செய்யப்படவுள்ளனர். கொலை, கொள்ளை, கற்பழிப்பு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற தவறுகளுடன் தொடர்புடைய எவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படவில்லை என சிறைச் சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனிய தெரிவித்துள்ளார். (ம-இ)

## சந்நிதியில்...

பட்டனர்.
அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குழுவாக இவர்கள் செயற்பட்டனரா என்ற கோணத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.
இது தவிர சந்நிதிக்கு வருகை தந்தோரின் நகைகளைக் காணவில்லை என்று நேற்று மட்டும் 16 முறைப்பாடுகள் பொலிஸாருக்கு வழங்கப் பட்டுள்ளன. சுமார் 30 பவுண் நகைகளைக் காணவில்லை என்று அந்த முறைப்பாடுகளில் தெரிவிக் கப்பட்டுள்ளது. இவை தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-26159)

## இரு வாள்களுடன்..

வவுனியா, செப். 1
கேரளக் கஞ்சா மற்றும் இரண்டு வாள்களுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 575 கிராம் கஞ்சாவும் மீட்கப்பட்டது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போதே குறித்த இளைஞர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளார். கைதான இளைஞனுக்கு 20 வயது. அவரிடம் மேலதிக விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-18)

## இராணுவத்தால்...

கையை முன்னெடுத்தனர். யாழ்ப்பாணம் - நாவாந்துறை, பொம்மைவெளிப் பகுதியிலேயே இவ்வாறு தேடுதல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுமார் 2 மணித்தியாலயத்திற்கு மேலாக இந்த சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. நீதி மன்றால் பிடியாணை பிறப்பிக் கப்பட்ட சிலரும், கஞ்சா மற்றும் ஹெரோய்ன் விற்பனையாளர்கள் சிலரும் இந்தத் தேடுதலில் கைது செய்யப்பட்டனர். அத்துடன் ஹெரோய்ன், கஞ்சா போதைப் பொருள்களும் மீட்கப்பட்டன.
கைதானவர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-இ)

## டக்ளஸிடன்....

வேறு யாரும் சிக்கினால் அதற்கு நான் பொறுப்பு அல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான அங்கயன் இராமநாதன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவரின் அலுவலகத் திறப்பு விழாவின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுக்கும், தங்களுக்கும் இடையில் பிரச்சினைகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது அது தொடர்பில் உங்களுடைய கருத்து என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேள்வியெழுப்பப்பட்டது. அந்தக் கேள்விக்குப் பதிலளித்த அவர்:
எனக்கு அப்படியொரு பிரச்சினையும் இல்லை. பிரச்சினையாக இருப்பவர்களிடம் தான் அதைக் கேட்கவேண்டும். என்னுடைய வேலையை, எனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை நான் சரியாகச் செய்வேன். ஏனையவர்களும் அதைச் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் எங்களுக்கிடையில் பிரச்சினை இருக்கு, இருக்கு என்று சொல்லிக்கொண்டு பலர் எங்களைக் கோத்து விடக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. அந்த முயற்சியில் நான் மாட்டமாட்டேன், வேறு யாரும் மாட்டினால் நான் பொறுப்பல்ல என்றார். (ப-21)

## மின்னல் தாக்கி...

டன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே அவரை இவ்வாறு மின்னல் தாக்கியுள்ளது. கணவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ம)

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு...

பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை இன்றுடன் நிறைவ டைவதாக கல்வி அமைச்சு முன்னதாக அறிவித்திருந்தது. இதற்கமைய, இதுவரை 3 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.
இருப்பினும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகளிடம் இருந்து கணிசமான எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாமையினால் விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, 2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சை எதிர்வரும் 2021ஆம் ஆண்டில் நடத்தப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
இதன்படி எதிர்வரும் 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை கல்விப்பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அங்கஜனுக்கு...

களைப் போர்த்தி, மாலைகளை அணிவித்து அதிகாரிகள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தனர்.
அலுவலகத்தின் பெயர்ப்பலகையை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன் திரைநீக்கம் செய்தார். யாழ்பாண மாவட்டச் செயலர் மகேசன் அலுவலகத்தை நாடா வெட்டித் திறந்து வைத்தார். மதத் தலைவர்களின் ஆசியுடன், அங்கஜன் இராமநாதன் ஒருங்கிணைப்பு இணைத் தலைவர் பதவியைப் பொறுப்பேற்றார்.
நிகழ்வில் மாவட்டச் செயலக அதிகாரிகள், வடக்கு மாகாண பதிவு நிலை அதிகாரிகள், பிரதேச செயலர்கள், இராணுவம், கடற்படை, பொலிஸ் உயரதிகாரிகள், அங்கஜனின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-ப)

## கொரோனா பெருந்தொற்றால்...

நோய் பிரிவின் தலைமை தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளில் மிகவும் இறுக்கமாகக் கொரோனா கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் மீண்டும் அங்கு கொரோனா பரவ ஆரம்பித்துள்ளது. இலங்கையில் கொரோனா கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் மீண்டும் இதுபோன்ற நிலைமை ஏற்படலாம்.
எனவே இந்த விடயத்தில் இலங்கை மிகமிக அவதானமாகச் செயற்பட வேண்டும்.
தொடர்ந்து சுகாதார முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றார். (ம-இ)

# நீர் வழங்கல் சபை வெற்றிடங்களுக்கு முறையற்ற விதத்தில் ஆட்சேர்ப்புக்கள்

## நீர் வழங்கலை பாதுகாக்கும் பாவனையாளர் அமைப்பின் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.1

நீர் வழங்கல் சபையில் காணப்படும் வெற்றிடங்களுக்கு கடந்த காலங்களில் முறையற்ற விதத்தில் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றுள்ளன என நீர் வழங்கலை பாதுகாக்கும் பாவனையாளர் அமைப்பின் தலைவர் திஷ்ஷ த சோயக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசிய நீர் வழங்கல் சபையில் காணப்படுகின்ற ஊழியர், மானி வாசிப்பாளர் போன்ற பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களின்போது எதிர்காலத்தில் மனித வள நிறுவனங்கள் மூலம் சேவையில் இணைத்துக்கொள்ள வேண்டாம் எனத் தேசிய நீர் வழங்கல் சபையின் மேலதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன். நீர் வழங்கல் சபையில் காணப்படும் வெற்றிடங்களுக்கு மனித வள நிறுவனங்கள் ஊடாக கடந்த காலங்களில் ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

முறையற்ற விதத்தில் இதற்குப் பொறுப்பான அமைச்சின் அனுமதியின்றி தனியார் மனித வள நிறுவனங்கள் ஊடாக ஒப்பந்த அடிப்படையில் தகுதியற்றவர்கள் கடந்த காலத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். தற்போதைய அரசின் சௌபாக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் முன்னைய தவறுகள் இடம்பெறாது தேசிய நீர் வழங்கல்சபையில் காணப்படுகின்ற ஊழியர், மானி வாசிப்பாளர் வெற்றிடங்களுக்கு நீர் வழங்கல் அமைச்சின் பரீட்சை மூலம் இடம்பெற உள்ளது. இதன் மூலம் நாட்டு மக்களுக்கு சிறந்த நீர் வழங்கல் சேவையை வழங்க முடிவதுடன் தகுதியானவர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)





# தனிநாயகம் அடிகளாரின் 40வது நினைவு தினம்

வவுனியா,செப்.1

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தமிழுக்கும் சைவத்திற்கும் அரும்பணியாற்றிய தனிநாயகம் அடிகளாரின் நினைவு நாள் நிகழ்வு வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் அமைந்துள்ள அடிகளாரின் உருவசிலைக்கு முன்பாக இன்று காலை அனுஸ்டிக்கப்பட்டது.

இதன்போது அடிகளாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர்தூவி அஞ்சலி நிகழ்த்தப்பட்டதுடன் நினைவுப் பேருரையை தமிழருவி சிவகுமாரன் வழங்கினார்

வவுனியா நகரசபையின் உபநகர பிதா சு.குமாரசாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான க.சந்திரகுலசிங்கம், நா.சேனாதிராயா, சு.காண்டீபன், சுமந்திரன், தமிழ்விருட்சம் அமைப்பின் சந்திரகுமார் கண்ணன், சமூக ஆர்வலர் விக்னா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ந-110)

# தொடரும் வறட்சி: நீர் விநியோகம் சிக்கலில்?

தொடரும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டின் பல பகுதிகளுக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் வறட்சியான காலநிலை தொடரும் பட்சத்தில் எதிர்வரும் நாட்களில் நீர் விநியோகத்தை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக் கப்படும் என நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது.

எனவே, பாவனையாளர்கள் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கோரிக்கை விடுத்துள்ளது. (ந-இ)

# சிறையிலிருந்து தப்பிய கைதி ஒரு மாதத்தின் பின் கைது

களுத்துறை, செப்.1

களுத்துறை சிறையிலிருந்து தப்பிச்சென்று தலைமறைவாகியிருந்த பாதகட அகுலுவா எனும் கைதி ஒரு மாதத்தின் பின்னர் நேற்று திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்கிடமான நபரொருவர் நாகொட பொது வைத்தியசாலைக்கு பின் பகுதியில் நீண்ட நேரமாக இருப்பதாக களுத்துறை உப பொலிஸ் பரிசோதகருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர். இதன்போது நேற்றுக்காலை நாகொட வைத்தியசாலையின் பின் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளிலேயே குறித்த நபர் ஹெரோய்ன் தொடர்பான வழக்கில் கைதானவரெனவும் கடந்த மாதம் களுத்துறை சிறையில் இருந்து தப்பிச் சென்று தலைமறைவாகியிருந்த கைதி என்பதும் தெரியவந்துள்ளது.

நாகொட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அவரின் தாயாரை பார்வையிடுவதற்காக, சந்தேகநபர் வைத்தியசாலையின் பின்பக்க மதிலால் பாய்ந்து செல்வதற்காக வைத்தியசாலை வளாகத்துக்கு வெளியில் இருந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், போலியான பெயரை பொலிஸாரிடம் கூறியிருந்த இச் சந்தேகநபர் கடந்த மாதம் இரண்டாம் திகதி வேறு இரண்டு நபர்களுடன் இணைந்து களுத்துறை சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றிருந்தார் எனத் தெரிவித்துள்ள பொலிஸார் சந்தேகநபரிடம் மேலதிக விசா ரணைகளை முன்னெடுத்து வரு கிறோம் எனத் தெரிவித்துள்ளனர். (ந-இ)





மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர் விசேட பாடசாலை மாணவர்களுக்கு தினமும் இலவசமாக காலை உணவு வழங்கும் விசேட திட்டம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நலன்விரும்பி ஒருவரின் நிதியுதவியின் கீழ் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் வல யக் கல்விப்பணிமனையின் சமாதானக் கல்வி மற்றும் சமூக நல்லிணக்க இணைப்பாளர், வலயக் கல் விப்பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (ந-150)

# தாயகம் திரும்பினர் 640 இலங்கையர்கள்

கொழும்பு, செப்.1

கொவிட்-19 தொற்று காரணமாக நாடு திரும்ப முடியாது மத்திய கிழக்கில் சிக்கியிருந்த 640 பேர் இன்றையதினம் நாடு திரும்பியுள்ளனர்.

கட்டார் டோஹாவில் இருந்து 59 பேரும், குவைத்திலிருந்து 293 பேரும் டுபாயிலிருந்து 288 பேரும் இன்று அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, சீன முதலீட்டுத் திட்டங்களில் பணிபுரியும் 168 சீனப் பிரஜைகள் நேற்று இரவு சீனாவின் செங்குடு விமான நிலையத்தில் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். (ந-இ)



# ஹெரோய்ன் பகிர்வுக்கு புதிய நிற முறை

## குற்ற விசாரணை பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, செப்.1

நாட்டில் ஹெரோய்ன் பக்கெட்டு களைப் பகிர்வதற்காக புதிய நிற முறை ஒன்று பயன்படுத்தப்படுகின் றது என குற்ற விசாரணை பிரிவி னர் பிரதி சொலிஸ்டர் நாயகம் திலீப பீரிஸ், கொழும்பு பிரதான நீ]வான் லங்கா ஜயரத்னவிடம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மிகப்பெரிய ஹெரோய்ன் போதைப்பொருள் வர்த்தகர்கள், ஹெரோயின் பக்கெட்டுகளை நாடு முழுவதும் பகிர்வதற்காக இந்த முறையைப் பயன்படுத்துகின்ற னர். குறித்த ஹெரோய்ன் பக் கெட் யாருடையது என்பது தொடர்பில் அடையாளம் காண்ப தற்காக நகரத்திற்கு நகரம் பல் வேறு நிறங்கள் பயன்படுத்தி அவற்றை விற்பனை செய்யப்படு கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. போதைப்பொருள் விற்பனை செய்வது தொடர்பில் தற்போது விளக்கமறியலில் உள்ள பொடி மற்றும் லெசி உட்பட போதைப் பொருள் விற்பனை யாளர்களின் ஆதரவாளர்களினால் ஹெரோய்ன் பக்கெட்களுக்கு பல்வேறு நிறம் பயன்படுத்தி நாடு முழுவதும் பகி ரப்படுகிறது. எனத் தெரிவித்துள் ளார். (ந-இ)



# நாடு முழுவதும் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, செப்.1

எதிர்வரும் சில நாள்களுக்கு நாடு முழுவதும் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என எதிர் பார்க்கப்படுவதாக வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வுகூறி யுள்ளது.

மத்திய, ஊவா, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களி லும் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின் றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற் றும் வீசக்கூடும்.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத் திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத் துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையி லிருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணித்தியாலத் துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையான கடற்பரப்புகளிலும் காலியிலிருந்து மாத்தறை மற் றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்ப ரப்புகளிலும் காற்றின் வேகமா னது அவ்வப்போது மணித்தியா லத்துக்கு 50-55 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தி யம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது மிதமான கொந்தளிப்பாகக் காணப்படும். (ந-இ)

# முகக்கவசத்துக்குள் ஹெரோய்ன் கம்பஹாவில் நூதனமான கடத்தல்

கம்பஹா, செப்.1

முகக்கவசத்துக்குள் ஹெரோய்ன் கடத்தப்பட்ட சம்பவ மொன்று கம்பஹா கனேமுல்ல பகுதியில் பதிவாகியுள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சிறிய அளவில் 7 பொதிகளில் ஹெரோய்ன் முகக்கவ சத்துக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் 36 வயது டைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த ஹெரோய்ன் போதைப்பொருள் பாடசாலை மாணவர் களை இலக்கு வைத்து கடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (வ-இ)



# வேல் தாங்கிய பாதயாத்திரை ஆரம்பம்

திருகோணமலை, செப்.1

வரலாற்றுச் சிறப்புமிக்க வெருகலம் பதியா னின் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு, திருகோ ணமலை உப்புவெளி சோலை வைரவ கோவில் பாதயாத்திரைக் குழுவினரின் வேல் தாங்கிய பாதயாத்திரை இன்று செவ்வாய்க்கி ழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகியது.

திருகோணமலை அருள்மிகு மாதுமை அம் பாள் சமேத திருக்கோணேஸ்வரப் பெருமான் கோவிலில் இருந்து மூதூர் வெருகலம் பதி சித்திர வேலாயுத சுவாமி கோவிலுக்கு இந்தப் பாதயாத்திரை மேற்கொள்ளப்படவுள்ளது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெருகல் சித்திரவேலாயுதப் பெருமானின் தீர்த்தோற் சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பி டத்தக் கது. (ற-40)

# ஆன்மிகப் பாதயாத்திரை மட்டக்களப்பில் ஆரம்பம்

மட்டக்களப்பு, செப்.1

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் சித்திரவேலா யுத சுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு மட்டக்க ளப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட் டில் ஆன்மிகப் பாதயாத்திரை இன்று செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகியது. மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில் மண்டூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து விசேட பூசையின் பின்னர் இப் பாதயாத்திரை ஆரம்பமானது.

கொரோனா அச்சம் காரணமாக சுகாதாரத் திணைக்களத்தி னால் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக குறைந் தளவு பக்தர்களே இப் பாதையாத்திரையில் கலந்துகொண் டுள்ளனர்.

மண்டூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து இன்று ஆரம்பமான யாத்திரை எதிர்வரும் திங்கட்கிழமை மாலை வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தைச் சென்றடையும்.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் ஆன்மிகப் பாதையாத்திரை வருடா வருடம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-150)



# ஐரோப்பிய நாடுகளில் தொழில்: வங்கி கணக்குகளில் மோசடி

ஐரோப்பிய நாடுகளில் தொழில் பெற்றுத்த ருவதாகக் கூறி வங்கி கணக்குகளில் மோச டிகள் இடம்பெற்று வருவதாக எச்சரிக் கப்பட்டுள்ளது.

இந்த மோசடி தொடர்பில் பொதுமக்க ளுக்கு தெளிவுபடுத்தும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் என நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும்,பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து இந்த மோச டிச் சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த கும்பலினால் மோசடியான முறையில் நபர்களின் தனிப்பட்ட தகவல் கள் பெற்றுக்கொள்ளப்பட்டு, அதன் பின்னர் அவர்கள் வைப்பிட்டுள்ள பணத்தை அவர்களுக்கே தெரியாமல் இக் கும்பல் கொள்ளையடித்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, வெளி நாடுகளில் தொழில்புரிவதற்கான விசா அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொடுப் பதாகத் தெரிவித்து 60 மில்லியனுக்கும் அதிகமான நிதியை மோசடி செய்தமை தொடர்பில் இளம் தம்பதியினர் அண் மையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். (ந-இ)

# மத்தள விமானநிலைய அபிவிருத்தி விரைவில்

## சுற்றலாத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.1



மத்தள சர்வதேச விமான நிலையத்தை பெரியளவில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் பதவியேற்று அமைச்சர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து மத்தள சர்வதேச விமான நிலையத்துக்கு விஜயம் செய்து அதனைப் பார்வையிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொவிட்-19 நிலைமையின் காரணமாக எமக்கு விமான நிலையங்களைத் திறக்க முடியாமல் உள்ளது.

இருந்தாலும் சுகாதாரத் துறையினர் இதற்கான அனுமதியை வழங்குவார்களானால் விமான நிலையத்தை எம்மால் திறக்கமுடியும். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள ராஜபக்ச சர்வதேச விமான நிலையம் என்பனவற்றை அபிவிருத்தி செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ற-இ)

---

### கடை உடைப்பு:

# பணம், மீள் நிரப்பு அட்டைகள் திருட்டு

கொழும்பு, செப்.1

திம்புள்ளை பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டக்கலை பிரதான நகரில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கடையை உடைத்து பணம் மற்றும் தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 2.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் திருட்டுச் சம்பவத்தின்போது ஒரு லட்சத்து பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பணம் மற்றும் மீள் நிரப்பு அட்டைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தத் திருடர்கள் கோயில் பக்கமாக வந்து பூட்டை இரும்பு கம்பியால் உடைத்து திருடிச் செல்லும் காட்சிகள் அக்கடையில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமராவில் பதிவாகியுள்ளன.

இச் சம்பவம் குறித்து திம்புள்ளை பத்தனை பொலிஸார் மற்றும் நுவரெலியா கைரேகை அடையாளப் பிரிவினர் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற)





---



# கொரோனா 3017

கொழும்பு, செப்.1

நாட்டில் கொரோனாத் தொற்றாளிகளின் மொத்த எண்ணிக்கை 3,071 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் கட்டாரில் இருந்து அழைத்துவரப்பட்டவர்கள் 54 பேரும், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து அழைத்துவரப்பட்டவர்கள் 2 பேரும், இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள் 2 பேரும் அடங்குகின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சைபெறுவோரின் எண்ணிக்கை 191ஆக உயர்வடைந்துள்ளது. அத்துடன் 50 பேர் கொரோனா சந்தேகத்தின் பேரில் வைத்தியசாலைக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். 8 பேர் நேற்று குணமாகிய நிலையில் மொத்தமாக தொற்றில் இருந்து குணமானோரின் எண்ணிக்கை 2868 ஆக உயர்ந்துள்ளது. (ந-இ)

---

# கண்டி அதிர்வு தொடர்பில் ஆராய மேலும் ஒரு குழு

கண்டி, செப்.1

கண்டியின் சில பிரதேசங்களில் ஏற்பட்ட அதிர்வு நிலை தொடர்பில் ஆராய்வதற்கு மேலும் ஒரு குழு அனுப்பப்பட்டுள்ளது என புவியியல் பணியகம் தெரிவித்துள்ளது. இதன்படி, 6 பேர் அடங்கிய குழுவொன்று அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த 29 ஆம் திகதி இரவு கண்டி தலத்துஓய, குருதெனிய, ஹாரகம, அனுரகம உள்ளிட்ட பகுதிகளில் அதிர்வு நிலை உணரப்பட்டுள்ளன. இது தொடர்பில் புவியியல் பணியகம் முதற்கட்ட விசாரணைகளை ஆரம்பித்ததுடன் அது தொடர்பான விசாரணை அறிக்கை நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

---

# பொலிஸ் நிலையத்தில் பிக்குகள் மீது தாக்கு!

கொழும்பு, செப்.1

காலி - அஹுங்கம பொலிஸ் நிலையத்தில் பௌத்த பிக்குகள் சிலர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்று இரவு இடம்பெற்றிருக்கும் இச் சம்பவத்தின்போது பதிவாகிய காணொளி தற்போது வைரலாகப் பரவிவருகின்றது. விசாரணைக்காக பிக்கு ஒருவர் உள்ளே பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் பேச்சு நடத்திவருகின்ற நிலையில், அதனைக் காணொலியாக பதிவுசெய்த பிக்குகள் மீதே பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

---

# போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட இருவர் கைது

கொழும்பு, செப்.1



10 லட்சம் ரூபா பெறுமதியான 200 ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவரும் சட்டவிரோத நாணயத்தாள்களை அச்சிட்டுக் கொண்டு செல்ல முற்பட்டபோது தங்காலை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ-இ)

---




# தலதா இணையத்தளத்தின் மீது நைஜீரியாவிலிருந்து தாக்குதல்

கண்டி, செப்,1

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தின் மீது நடத்தப்பட்ட சைபர் தாக்குதல் நைஜீரியா நாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையத் தாக்குதலை மேற்கொள்ளும் நபர்களே இதை நடத்தியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

தற்போது அந்த இணையதளம் வழமைக்கு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)








வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை 8 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

# குழந்தையோடு சிறைத் தண்டனை விரைவில் மஹிந்தவிடம் அறிக்கை

கொழும்பு, செப்.1

சிறு பிள்ளைகளுடன் விளக்கமறியல் மற்றும் சிறைச்சாலைகளில் உள்ள தாய்மார்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உள்ளடக்கிய அறிக்கை பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் இந்த வாரம் கையளிக்கப்படவுள்ளது என சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளித்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

சிறைச்சாலைகளிலுள்ள தாய்மாரில் ஐவர் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்பதுடன் ஏனையவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களாவர். பிரதமரிடம் கையளிக்கப்படவுள்ள அறிக்கை மூலம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஐவரில் இருவரை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்வதற்கும், விளக்கமறியலில் உள்ளோரை துரிதமாக பிணையில் விடுதலை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

3 5 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் தாய்மார்கள் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படுவதற்கு அமைவாக சம்பந்தப்பட்ட தாய்மார்களின் பிள்ளைகளைப் பாதுகாப்பாக அவர்களது நெருக்கமான உறவினர்களிடம் ஒப்படைப்பது பொருத்தமானது என்பதனால் அதற்கான சட்ட வரைபை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார்.

இதேவேளை, போதைப்பொருள் வியாபாரம் உள்ளிட்ட வெவ்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டு சிறைத் தண்டனை அனுபவிக்கின்ற தாய்மார்களின் 46 பிள்ளைகள் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலுமுள்ள சிறைச்சாலைகளில் வசிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது என அண்மையில் பத்திரிகையொன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

அதனையடுத்து சிறைத் தண்டனை அனுபவித்து வரும் தாய்மாருடைய பிள்ளைகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வளித்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளேவுக்கு பிரதமர் ஆலோசனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)



## சிகரெட்டுகள் மீட்பு

கொழும்பு, செப்.1

ஒரு தொகைச் சிகரெட்டுக்கள் கட்டுநாயக்க வானூர்தி தள சுங்க தரப்பினரால் மீட்கப்பட்டுள்ளது. அதன் பெறுமதி ஒரு கோடியே 70 லட்சத்து 40 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவிசாவளை பகுதியிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு முகவரியிட்டு அவை அனுப்பப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)

## சி.ஐ.டி அதிகாரி பணிநீக்கம்

கொழும்பு, செப்.1

கல்கிஸ பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்பு பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி டி.ஆர் ஹெட்டியாராச்சி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். பாதாள உலக குழுக்களுடன் தொடர்பில் இருந்தமையால் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது. (வ-இ)

# மயங்கி வீழ்ந்த இளைஞர் சாவு!

திருகோணமலை, செப்.2

திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளைஞர் ஒருவர் திடீரென நினைவற்று வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.


மனையாவெளிப் பகுதியைச் சேர்ந்த அ.தனுசியன் (வயது19) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவரது உறவினர்கள் வவுனியாவில் இருந்து திருகோணமலைக்குச் சுற்றுலா வந்துள்ளனர். அவர்களில் ஒருவர் தசியனுடன் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்துள்ளார். திடீரெனத் தொலைபேசி துண்டிக்கப்பட்டதுடன், மறுமுனையில் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. அதையடுத்து அவர்கள் தனுசியனின் வீட்டருகே சென்ற போது, அவர் கீழே வீழ்ந்திருந்த நிலையில் காணப்பட்டார் என்றும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

அவர் உடனடியாக திருகோணமலை பொது மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

உடற் கூற்றுப் பரிசோதனைக்காக உடல் திருகோணமலை பொது மருத்துமவனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை துறைமுகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-இ)




இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிராணாப் முகர்ஜியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சுதர்சன் பட்நாயக் என்பவர் வடிவமைத்த மணற் சிற்பம்.



## பிரிட்டனில் பாடசாலைகள் மீள ஆரம்பம்

கொரோனாப் பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று முதல் பிரிட்டனில் திறக்கப்படவுள்ளன. மாணவர்கள், ஆசிரியர்கள் இதற்குரிய கட்டுப்பாடுகளுடன் வகுப்புகளுக்கு வரவேண்டும். நேரடித் தொடர்பு இல்லாமல் சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பது அவசியம் என்று பிரிட்டன் கல்வித்துறை அறிவுறுத்தியுள்ளது. (வ)





79 வருட பந்தம்

# உலகின் வயது முதிர்ந்த தம்பதிகளாக கின்னஸ் சாதனை

குய்ட்டோ, செப்.1

ஈக்வடோரைச் சேர்ந்த தம்பதியர் உலகின் வயது முதிர்ந்த திருமண ஜோடியாக கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் பதிவாகியுள்ளனர். ஜூலியோ சீசர் மோரா மற்றும் வொல்டுமீனா மெக்லோவியா ஆகியோர் திருமண பந்தத்தில் இணைந்து 79 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. ஜூலியோ சீசமோரா 110 வயதைக் கடந்துள்ள நிலையில் வொல்டுமீனாவுக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 105 வயதாகவுள்ளது. இந்நிலையில் அவர்கள் இருவரது வயதையும் இணைத்தால் 214 வருடங்கள் 358 நாட்கள் என அடையாளப்படுத்தப்பட்டு உலகில் வயதான திருண ஜோடி என கின்னஸ் சாதனை புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

பாடசாலை விடுமுறை காலத்தில் சந்தித்த இருவரும் 7 வருட பழக்கத்தின் பின்னர் 1941 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதி திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர் எனக் கின்னஸ் சாதனை குழுவினர் தெரிவித்துள்ளனர். (வ)

# உலகில் மிகச் சிறிய பறக்கும் கார் தயார்

டோக்கியோ, செப்.1

ஸ்கை ட்ரைவ் நிறுவனம் தயாரித்துள்ள பறக்கும் கார் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டுள்ளது.

அதற்கென வடிவமைக்கப்பட்ட சோதனைக் களத்தில் சுமார் 4நிமிடம் அந்தக் கார் பறந்தது. இதன் நீளம் நான்கு மீற்றர்களாகும். அகலமும் உயரமும் முறையே இரண்டு மீற்றர்கள். இதுவே உலகில் மிகச் சிறிய பறக்கும் கார் என்று ஸ்கை ட்ரைவ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வழக்கமான இரண்டு கார்களை நிறுத்துவதற்குத் தேவையான இடம், ஒரு பறக்கும் காரைத் தரையிறக்குவதற்குப் போதுமானது எனவும் இன்னும் மூன்று ஆண்டுகளில் பறக்கும் கார் விற்பனைக்கு வரும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தக் கார் இருந்த இடத்தில் இருந்து அப்படியே மேல் எழும்புவதற்கும், தரை இறங்குவதற்குமான தொழில்நுட்பத்தை கொண்டுள்ளது. அத்துடன் இதற்கு ஓடுபாதை தேவை யில்லை என்பது இதன் முக்கிய அம்சமாகப் பார்க்கப்படுகிறது. (வ)






# இராட்சத பட்டத்தில் சிக்கி காற்றில் பறந்த சிறுமி

## வைரலாகும் வீடியோ

தைவானின் வடகிழக்கு நகரான ஹிசின்ஸூவில் நேற்று முன்தினம் பட்டத் திருவிழா இடம்பெற்றது.

அதில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருந்தனர். அதன்போது எதிர்பாராதவிதமாக, 3 வயது சிறுமியொருவர் ஒரு ராட்சத பட்டத்தின் வால் பகுதியில் சிக்கி 100 அடி உயரத்துக்கு மேல் இழுத்துச் செல்லப்பட்டார். அதைப் பார்த்து சிறுமியின் பெற்றோரும், பார்வையாளர்களும் பயத்தில் அலறினர். சிறிது நேரத்தில் காற்றின் வேகம் குறைந்ததும் அந்தச் சிறுமியுடன் பட்டம் தரைக்கு வந்தது. சம்பவத்தில் சிறு காயங்களுடன் சிறுமி உயிர் தப்பினார். இந்தக் காட்சி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. (வ)

## காதலிக்கு முத்தம்; சிறையில் காதலன்

தற்போதைய இளைய சமுதாயத்தினர், புதுமையாக ஏதாவது செய்ய ஆசைப்பட்டு, அது விபரீதமாக முடிந்து, 'கம்பி' எண்ணும் போக்கு, உலகம் முழுவதும் அதிகரித்து வருகிறது.

மேற்காசிய நாடான ஈரானைச் சேர்ந்த தடகள வீரர், அலிரெஜா ஜபல்கி. அவ்வப்போது வித்தியாசமாக ஏதாவது செய்து, அனைவரது கவனத்தையும் ஈர்ப்பார். சமீபத்தில், தன் காதலியுடன் டெஹ்ரான் நகரில் உள்ள மிக உயரமான கட்டடத்துக்குச் சென்றார். அங்குள்ள மொட்டை மாடியின் விளம்பில் காதலியை அமர வைத்து, தானும் அமர்ந்தார். பின், காதலிக்கு முத்தம் கொடுத்தார். இந்த அபாயகரமான காட்சியை, 'வீடியோ'வாக பதிவு செய்து, சமூக வலைதளத்தில் வெளியிட்டார்.

'ஒரு பொது இடத்தில், அதுவும் அபாயகரமான நிலையில், இப்படி சேட்டை செய்வோரை கடுமையாக தண்டிக்க வேண்டும்...' என, பலரும் கருத்து தெரிவித்தனர். இதையடுத்து, தடகள வீரரும், அவரது காதலியும் கைது செய்யப்பட்டனர். உயரமான இடத்தில் வைத்து, காதலிக்கு முத்தம் கொடுத்து, சாதனை படைக்க நினைத்த, அந்த தடகள வீரர், இப்போது, சிறையில் கம்பி எண்ணுகிறார்.

## தனி விமானத்தில் சென்று ஓணம் கொண்டாடிய நயன் –விக்னேஷ்



தற்போதைய தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையான நயன்தாராவும், "நானும் ரவுடிதான்" திரைப்படத்தின் மூலம் பிரபலமடைந்த இயக்குநர் விக்னேஷ் சிவனும் நீண்ட காலமாக காதலித்து வருகின்றனர். கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் நாடெங்கிலும் நடைமுறையில் இருக்கும் ஊரடங்கு முடிவுக்கு வந்தவுடன் இவர்களின் திருமணத்தை எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கையில் ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.

தற்போது அவர்கள் ஓணம் கொண்டாடுவதற்காக சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் கேரள மாநிலம் கொச்சி சென்றுள்ளனர். கொச்சியில் உள்ள நயன்தாராவின் வீட்டில் இருவரும் ஓணம் பண்டிகையை கொண்டாடினர்.



# திறமைகளும் சாதனைகளும் உங்கள் கரங்களிலே...

வெற்றி கிடைத்துவிட்டால் 'எல்லாமே என்னால்தான்' என்று நினைப்பவர்களை அதிகம் பார்த்திருப்போம். ஆனால், வெற்றி கிடைத்த பிறகு இதற்கு நான் தகுதியான நபர்தானா என்று சந்தேகம் கொள்கிறவர்களைப் பற்றி அதிகம் கேள்விப்பட்டிருக்க மாட்டோம். இதற்கு Impostor Syndrome என்கிறது உளவியல்.

சினிமா, அரசியல், வர்த்தகம் என்று பல துறைகளிலும் கொடி கட்டிப் பறக்கும் பல ஜாம்பவான்களுக்கே இந்த பிரச்சினை உண்டு என்பது அதிர்ச்சித் தகவல். உலகளவில் தத்தமது துறைகளில் முன்னேறி சாதனைகளைப் படைத்து வெற்றி வாகை சூடிய பலரது மனதுக்குள் உட்புகுந்தால் அங்கே ஒரு ரகசியம் அடைபட்டுக் கிடக்கிறது. அதுவே Imposter Syndrome எனும் உளவியல் சிக்கல். Imposter எனும் ஆங்கில வார்த்தைக்கு மோசடிக்காரன் என்பது பொருள். அந்த அர்த்தத்தில் இந்த Imposter Syndrome எனும் பிரச்சினையால் அவதிப்படுபவர்களும் உள்ளுக்குள் தங்களை ஒரு மோசடிப் பேர்வழி என்றே எண்ணுகிறார்கள்.

ஒரு நபர் மாதம் 10 ஆயிரம் சம்பாதிப்பவராக இருந்தாலும் சரி... 10 கோடி வருமானம் ஈட்டுபவராக இருந்தாலும் சரி... முனைப்பும், முழு முயற்சியும் இல்லாமல் வெற்றியைத் தொட்டுவிட முடியாது. பல வருட உழைப்பும், அனுபவங்களும், யுக்தியுமே வெற்றிக்கு அருகில் அந்த நபரை அழைத்துச் செல்லும் என்பது உலக நியதி. இதற்கு மாறாக இம்போஸ்டர் சிண்ட்ரோமால் பாதிக்கப்பட்டோர், தங்களது வெற்றியும் சாதனைகளும் அதிர்ஷ்டத்தினாலோ அல்லது தற்செயலாக கடவுள் ஆசீர்வாதத்தாலோ தமக்கு கிடைத்ததாக நினைப்பர். கேட்பதற்கு விசித்திரமாகத் தோன்றினாலும் சமீபத்தில் ஆராய்ச்சிகளும், அவர்களது நேர்காணல்களும் இதை நிரூபணப்படுத்தி இருக்கிறன.

**ஏன் இப்படி உளவியல் சிக்கலுக்கு ஆளாகிறார்கள்?**

திறமைகளும் சாதனைகளும் தங்களது கரங்களில் இருந்தபோதும், தங்களை தோல்வியுற்றவராகவும், திராணியற்றவர்களாகவுமே உள்ளுக்குள் இவர்கள் நினைத்துக்கொள்வர். இதனால் தங்களது வாழ்வில் முக்கியமாக உத்தியோகம் சம்பந்தப்பட்ட இடங்களில் பல சங்கடங்களுக்கு ஆளாகிறார்கள்.

தொழில்களிலும், பல்வேறு துறைகளிலும் பெண்கள் மேலோங்கி சாதனைகள் பல குவித்திருந்தாலும், அவர்களில் சிலருக்கு 'தான் இதற்கு தகுதியற்றவர், ஏதோ நல்ல நேரம் என்பதால் உயர்ந்துவிட்டோம், மற்றபடி நாம் சராசரி அல்லது அதற்கும் கீழ்தான்' என்ற எண்ணங்கள் அவர்களது உள்மனதை துளையிட்டுக் கொண்டிருந்தன. அதுவே பின்னாட்களில் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு தடையாகவும் நின்றுகொண்டிருந்தது.

**தாழ்வு மனப்பான்மைக்கும் இதற்கும் தொடர்பு உண்டா?**

Inferiority complex என்பதைப் போல இது ஒரு வகை உளவியல் நோய்க்கூறு. எளிய வகையில் சொல்ல வேண்டுமென்றால் தாழ்வு மனப்பான்மையைப்(Inferiority Complex) போன்றது எனலாம். தன்னம்பிக்கையையே சீர்குலைக்கும் ஆயுதமாகவும் இருக்கிறது. இதுவே நாளடைவில் மனப்பதற்றம் மற்றும் மனச்சோர்வு நிலைக்கு தள்ளிவிடும்.

**இம்போஸ்டர் சிண்ட்ரோம் பிரச்னையால் பாதிக்கப்பட்டோரின் எண்ண ஓட்டம் எப்படி இருக்கும்?**

இந்த பாதிப்பு மூன்று விதமாக இருக்கலாம். நான் ஒரு ஏமாற்றுக்காரன் என்பது முதல் வகை. இந்த சிந்தனைக்குத் தீனி போடுவோர் 'தான் தகுதியற்றவன், மோசடிப் பேர்வழி' என்ற சிந்தனையை முன்னிறுத்துவார்கள். தங்கள் குட்டு என்றாவது ஒருநாள் வெளிப்பட்டு, தங்களது முகத்திரை கிழியும் என்று எண்ணுவார்கள். இரண்டாவதாக அதிர்ஷ்டமே கைகொடுத்தது என்று நினைப்பார்கள். இவர்கள் தங்களது வாய்ப்புகளும், வெற்றிகளும் சந்தர்ப்பத்தினால் கிட்டியவையே தவிர 'நான் அதற்கு சரிப்பட்டு வர மாட்டேன்' என்று வடிவேலுவின் வசனத்தைப்போல் நினைப்பவர்கள்.மூன்றாவதாக அதெல்லாம் ஒன்னும் பெரிய விஷயம் இல்லீங்க என்பார்கள். இவர்கள் அதீத தன்னடக்கம் கொண்டவர்கள். எத்தகைய சாதனைகளையும் சிறியதாகவே நினைப்பவர்கள். Google CEO பதவி கிடைத்தால்கூட 'இதெல்லாம் என்னங்க பெரிய விஷயம்' என்று பேசுபவர்கள்.

**இதனால் என்ன பாதிப்பு ஏற்பட்டுவிடும்?**

கட்டாயம் பெரிய பாதிப்புகள் உள்ளது. ஆம்... இந்த இம்போஸ்டர் சிண்ட்ரோம் உங்களது தன்னம்பிக்கையையும், முயற்சிகளையும், வாய்ப்புகளையும் மெல்ல மெல்ல மென்று தின்றுவிடும். நாம் ஒரு மதிப்பற்றவர் என்று நினைக்க வைத்துவிடும். நாளடைவில் மன உளைச்சலுக்கும், பதற்றத்துக்கும் வழிவகுத்துவிடும். 'எவர் ஒருவர் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறாரோ, அவருக்கே வானம் வசப்படும்' என்று ஒரு பொன்மொழியுண்டு. நம்மை விளம்பரப்படுத்தாவிடினும்,நம் மதிப்பை நாம் அறிந்தே இருக்க வேண்டும். அதற்கு இம்போஸ்டர் சிண்ட்ரோம் மனநிலையை தூக்கி எறிய வேண்டும்.

**இம்போஸ்டர் சிண்ட்ரோமில் இருந்து எப்படி மீள்வது?**

இம்போஸ்டர் சிண்ட்ரோமில் இருந்து வெளி வர 7 வழிகள் உள்ளன. இவை நடைமுறை வாழ்வில் சாத்தியமே என்பதால் பின்பற்றுவதும் எளிதுதான்.

**1. மௌனம் கலையுங்கள்...**

இது ஒரு தேவையற்ற மனநிலை என்பதை உணருங்கள். களை எடுக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை உறுதிப்படுத்துங்கள். தனியாக, உள்ளுக்குள்ளேயே புழுங்காதீர்கள்.

**2. உண்மையையும் உணர்வையும் பிரித்துப் பாருங்கள்**

நீங்கள் திறமையானவர். பலகட்ட முயற்சிகளுக்குப் பின்னே உயர்ந்தவர். மற்றவர்களைவிட தனித்துவமானவர். இதுவே உண்மை. 'நான் தகுதியற்றவன்' என்பது உங்கள் உணர்வு. உண்மையும், உணர்வும் வேறு வேறு.

**3. பரிபூரணத்திற்கு முயற்சி செய்யுங்கள்**

எந்த ஒரு காரியத்தையும் மிகச் சிறப்பாக, பரிபூரணமாகச் செய்ய வேண்டும் என்று நினைப்பதில் தவறில்லை. ஆனால் அதையே பிடித்துத் தொங்காதீர்கள். இந்த மனநிலையால் தேங்கி நின்று விடாதீர்கள். கடந்து வாருங்கள். நடந்துகொண்டே இருங்கள்.

**4. வெற்றிகளையும், மதிப்புகளையும் தராசில் வையுங்கள்**

குறைகளையும், சந்தேகங்களையும் மட்டுமே உற்று நோக்கிக்கொண்டிருக்காதீர். மனம் எப்போதுமே தன்னிடத்தில் உள்ள குறைகளையே அசை போட்டுக் கொண்டிருக்கும். அதை நிறுத்திடுங்கள். உங்களிடத்திலுள்ள நல்ல விஷயங்களை பட்டியலிடுங்கள்.

**5. தோல்வியால் துவண்டு விடாதீர்கள்**

தோல்வியெனும் கல்லிலே உங்களது முதற்படிக்கட்டை செதுக்கிடுங்கள். யாரும் இங்கே முதல் முயற்சியிலேயே உச்சாணிக் கொம்பில் ஏறிவிடவில்லை. உலகமறிந்த பல சரித்திர சாதனைக் கதைகள் உண்டு. உங்களது கதையை எழுத ஆரம்பியுங்கள்.

**6. யாரும் இங்கே குறையற்றவர் இல்லை**

தவறு செய்வதிலும் தடுக்கி விழுவதிலும் ஒரு அவமானமும் இல்லை. எழுந்து நடந்துகொண்டே இருங்கள். யாருடனும் உங்களை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். திறன்களை மேம்படுத்திக்கொண்டே செல்லுங்கள்.

**7. கற்பனை செய்யுங்கள், கனவு காணுங்கள்**

நீங்கள் செய்யும் அனைத்து செயலின் இறுதியில் கிடைக்கப்போகும் வெற்றியையும், மாலை விழும் தருணங்களையும் கண் முன்னே கற்பனை செய்யுங்கள். முறுக்கேற்றும் இளையராஜாவின் இசையோ ஏ.ஆர்.ரகுமானின் தாளமோ மனதிற்குள் கேட்கட்டும். கனவுகளுக்கு உயிரூட்டட்டும். உங்களை நீங்களே தட்டிக்கொள்ளுங்கள். தன்னம்பிக்கையை உரம் போட்டு வளருங்கள்.



கண்டாவளைப் பிரதேசத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் இளந்தளிர் கழகத்தினால் அமரர் சுதர்சனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஸ்டார் கழகம் வெற்றிக்கிண்ணத்தை தட்டிச் சென்றது. இறுதியாட்டத்தில் புதிய சூரியன் கழகமும் ஸ்டார் கழகமும் மோதின. ஸ்டார் கழகம் வெற்றிக்கிண்ணத்தை தட்டிச் செல்ல புதிய சூரியன் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. (ற-21)

## புதினம் தெரியுமோ

அது உண்மையா இருக்குமோ எண்ட சந்தேகம் கிளம்புது கண்டியளே. மணிவண்ணன்தான் இதுவரைக்கும் பேச்சாளர் பதவியில இருந்தவர், இப்பவும் தான்தான் பேச்சாளர் எண்டு அவர் சொல்லுறார். அவர் போன கிழமை முன்னணி அலுவலகத்தில செய்தியாளர் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அங்க செய்தியாளர் சந்திப்பு நடத்தேலாது எண்டு அவரை வெளியில தள்ளிக் கதவை அடைச்சுப் போட்டுது கட்சித் தலைமை. இண்டைக்கு என்னடா எண்டால் கதவெல்லாத்தையும் அகலத் திறந்து சுகாஸ் வந்து செய்தியாளர் சந்திப்பு ஒண்டை நடத்தினப் பாத்தா, இந்தப் பதவிதான் இந்தப் பிரச்சினைக்கு எல்லாம் காரணமோ எண்ட ஐமிச்சம் எனக்கும் வருது கண்டியளே. கட்சித் தலைமையும் பேச்சாளர் பதவிய சுகாஸுக்குத்தான் குடுக்கப் போயினம் போல, அதுதான் சத்தமில்லாம நாலைஞ்சு செய்தியாளர் சந்திப்ப நடத்த விட்டிட்டுப் பிறகு ஒருத்தருக்கும் நோகாம மெல்லமா அறிவிப்பம் எண்டு நினைக்கினம் போல இருக்கு.
இண்டைக்கு செய்தியாளர்களைச் சந்திச்ச சுகாஸ் செய்தியாளர்கள் கேட்ட கேள்வியள் எல்லாத்துக்கும் அங்கங்க குரல எழுப்பி, இறக்கிப் பேசி ஒருமாதிரி சமாளிச்சார். காணாமல் ஆக்கப்பட்டவர்களிண்ட உறவுகள் நடத்தின போராட்டத்த விட்டிட்டு தனிய போராட்டம் நடத்தினதுக்கு ஒரு காரணம் சொன்னார் சொல்லுறன் கேளுங்கோ. காணாமல் ஆக்கப்பட்டவர்களிண்ட உறவினர்கள் நடத்தின போராட்டத்தில இருக்கிற சிலர் தரப்புத்தான் குழப்பங்களைச் செய்யுதாம். தாங்கள் இந்தப் போராட்டத்த குழப்பிற எண்ணத்தில இல்லை எண்டும் சொன்னார். ஒண்டு சேர்ந்துபோய் போராட்டத்தப் பலப்படுத்த வேணும், இல்லாட்டி ஒண்டும் பேசாம இருக்கோனும். எதுக்குத் தனிய போராட்டம், அது குழப்பம் தானே எண்டு கேக்கோனும் போல தான் இருந்தது. மனுசன் சமாளிக்கிறார் எண்டு தெரியுது பிறகெதுக்கு எண்டு விட்டிட்டன்.
என்னமோ இப்ப தமிழ்க் கட்சியளுக்குள்ள நடக்கிற பிரச்சினைகளுக்கு எல்லாம் பதவி தான் பாருங்கோ காரணம். அங்கால தமிழரசுக் கட்சிக்குள்ளயும் 'சு'வாலதான் பிரச்சினை, இங்கால முன்னணிக்கயும் 'சு'வலதான் பிரச்சினை எண்டு சந்தியில பகிடி விட்டுக் கதைக்கிறாங்கள் எண்டா பாருங்கோவன். இப்பிடி இவையள் தங்களுக்க அடிப்பட்டு முடிறதுக்குள்ள அடுத்த எலெக்சனும் வந்திடும் போல இருக்கு. சும்மா பேசி, பேசிக் காலத்தை ஓட்டலாம், மக்களைப் பேக்காட்டலாம் எண்டு நினைச்சியள் எண்டா போன எலொக்சன ஒருக்கா எல்லாரும் ஞாபகப்படுத்திப் பாக்கிறது நல்லம். இந்தப் பதவிப் போட்டியள விட்டிட்டு மக்களுக்கு என்ன நல்லதச் செய்யலாம் எண்டு யோசிங்கோ.

# சம்பியனானது மருதங்கேணி

யாழ்ப்பாணம், செப்.1

யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

இந்தப் போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது. இதில் கரவெட்டி பிரதேச செயலக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து துடுப்பெடுத்தாடிய மருதங்கேணி பிரதேச செயலக அணி 6 ஓட்டங்களைப் பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ற-422)






# டோனி குறித்து கம்பீர் கருத்து

புதுடில்லி, செப்.01

ஐ.பி.எல். தொடரில் டோனி 3 ஆவது வரிசையில் துடுப்பாட்டம் செய்யவேண்டும் என்று இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் கவுதம் கம்பீர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.பி.எல். போட்டிக்கான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியிலிருந்து சுரேஷ் ரெய்னா விலகி இருப்பதால் அனுபவம் வாய்ந்த துடுப்பாட்ட வீரரான டோனி 3 ஆவது வரிசையில் துடுப்பாட்டம் செய்யவேண்டும். கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக விளையாடாமல் இருந்து வரும் டோனி 3 ஆவது வரிசையில் இறங்கினால் அதிக பந்துகளைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுவதுடன் அணியின் துடுப்பாட்டத்துக்கும் வலுச்சேர்க்க முடியும். இந்த நல்ல வாய்ப்பை டோனி சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (ற)

# கேன் ரிச்சட்சன் விலகல்



புதுடில்லி, செப்.1

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட கேன் ரிச்சட்சன், நடப்பு ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகியுள்ளார். அவர் தனது முதல் குழந்தையின் பிறப்பை எதிர்பார்ப்பதால், இந்தத் தொடரிலிருந்து விலகியுள்ளார் என றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. இவருக்குப் பதிலாக அணியில் ஆஸ்ரேலியா அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஆடம் செம்பா சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார். ஆடம் செம்பாவின் வருகை, அணியின் சுழற்பந்து வீச்சு வரிசையை மேலும் வலுவூட்டும் என அணி நிர்வாகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே யுஸ்வேந்திர சாஹல், வொஷிங்டன் சுந்தர், மொயீன் அலி மற்றும் பவன் நேகி போன்ற சுழற்பந்து வீச்சாளர்களை அணி கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# பெங்களூர் அணிக்கு புதிய ஜெர்சி

டுபாய், செப்.1

ஐ.பி.எல்.தொடரில் கோலி தலைமையிலான பெங்களூர் அணி புதிய ஜெர்சியுடன் களமிறங்குகிறது. ஐ.பி.எல். தொடரின் 13 ஆவது சீசன் ஐக்கிய அரபு எமிரேட்சில் எதிர்வரும் செப்.19 ஆம் திகதி தொடங்குகிறது. இதற்காக கோலி தலைமையிலான பெங்களூர் அணியினர் டுபாய் சென்றுள்ளனர். ஐ.பி.எல். வழிகாட்டுதலின் படி 6 நாள்கள் தம்மைத் தனிமைப்படுத்திக் கொண்ட இவர்கள், வலைப்பயிற்சியை தொடங்கியுள்ளனர்.

இந்தமுறை பெங்களூர் அணிக்கு புதிய அனுசரனை கிடைத்துள்ளது. இதனால் புதிய ஜெர்சியுடன் களமிறங்கவுள்ளது. இதில், வழமை போன்று கறுப்பு மற்றும் சிவப்பு நிறத்தைத் தக்கவைத்துக் கொண்டது. புதிய அனுசரனையின் லோகோவும் இடம்பெற்றுள்ளது. கப்டன் கோலி, டிவிலியர்ஸ், பார்த்திவ் படேல், உமேஷ் யாதவ், யுவேந்திர சகால் ஆகியோர் புதிய ஜெர்சி அணிந்திருந்த புகைப்படத்தை பெங்களூர் அணி, தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. (ற)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 01.09.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.